20th November 1963]

திரு. க. ர. நல்லசிவம்: அரிசனங்களில் கல்வித்துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் அருந்ததியர் என்ற ஒரு வகுப்பினர் இருக்கிறார்கள். அவர்களுக்கு விசேஷமாக ஏதாவது சலுகைகள் கொடுக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா?

கனம் திரு. பூ. கக்கன்: இவர்களுக்கென்று தனியாக எந்த சலுகையும் காட்டுவதற்கில்லை. ஏழை குழந்தைகளுக்குப் பொதுவாக என்னென்ன சலுகைகள் காண்பிக்கப்படுகிறதோ அவைகள் இவர்களுக்கும் பொருந்தும்.

அடிநிலத் தண்ணீர் வளம்

* 334 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த மாநிலத்தின் அடிநிலத்தில் உள்ள தண்ணீர் வளம் பற்றி மாவட்டவாரியாக சர்வே செய்ய மாநில சர்க்கார் நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளனரா?

(இ) அப்படியானல், விவரம் என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*): Reports received by Government from many districts showed that the subsoil water table has been gradually going down due to the increasing number of deep wells and the installation of pumpsets. The need for a scientific survey of groundwater resources in this State was therefore felt and accordingly a scheme for the groundwater exploration and survey in this State was sanctioned, involving a recurring expenditure of Rs. 7.75 lakhs and a non-recurring expenditure of Rs. 5.71 lakhs. The scheme is being implemented by the Director of Industries and Commerce. In view of the difficulties involved in securing the necessary technical personnel and the required foreign exchange for the purchase of drills, the scheme is in a preliminary stage.

திரு. க. ர. நல்லசிவம்: இது சம்பந்தமாக கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, வேண்டிய அளவுக்கு டெக்னிக்கல் அறிவு பெற்றவர்கள் இந்தத் துறையில் இல்லாததின் காரணமாக போதிய அளவுக்கு வேலை நடைபெறவில்லை என்று சொன்னார்கள். அதை தவிர்க்கின்றவகையில் இந்த ராஜ்யம் விவசாயத்திற்கு மிகவும் முக்கியம் வாய்ந்த ராஜ்யம் என்று கருதி, அடித்தளத்திலுள்ள தண்ணீரை கண்டுபிடிக்கின்ற வழிக்கு, விசேஷமாக இங்கிருந்து இந்தத் துறையில் வேலை செய்கின்றவர்களில் சிலரை வெளி நாடுகளுக்கு அனுப்பி பயிற்சி கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: ஜியாலஜிக்கல் சர்வே பயிற்சி அவ்வளவு சுலபமாகக் கொடுக்க முடியாது. நீண்ட நாள் அனுபவம் தேவை. இப்போது ஸ்டேட் ஜியாலஜிக்கல்

டிப்பார்ட்மெண்டில் வேண்டிய அளவுக்கு ஆட்களை தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறோம். இதற்கான பயிற்சியும் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். தேவைப்படும் ஆட்கள் சீக்கிரமாகவே கிடைப்பார்கள் என்று நம்பலாம்.

திரு. க. ர. நல்லசிவம்: குறைந்தபட்சம் அடித்தண்ணீரை கண்டுபிடிக்க விவசாயிகளுக்கு ஆதரவாக அரசாங்கத்திலிருந்து ஏதாவது சாதனங்கள் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN: Sir, I am concerned only with the ground water survey. The question mav be put to the Minister for agriculture.

திட்டக்குடி ஆண்கள் மருத்துவ நிலையம்

*335 கேள்வி.—திரு. கே. நாராயணசாமி பிள்ளை: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம் வட்டம், திட்டக்குடி சர்க்கார் ஆண்கள் ஆஸ்பத்திரியை விஸ்தரிக்கும்படி 1962-ல் பொதுமக்கள் கொடுத்த மகஜரின்பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அத்தகைய மகஜர் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. ஆயினும், அந்த ஆஸ்பத்திரிக்கு அபிவிருத்திகள் செய்ய வேண்டும் என்று திரு. எஸ். கருப்பையா என்பவரிடமிருந்து முறையீடு ஒன்று வந்துள்ளது. அதைப் பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

No such mahazar has been received by the Government. A representation was, however, received from one Sri S. Karuppiah for carrying out improvements to the hospital and this is under consideration.

Employees of former Travancore-Cochin State

*336 Q.—Sri R. PONNAPPA NADAR: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether the services of all the Work Establishment personnel in the Public Works Department who have been transferred from the ex-Travancore-Cochin State have been regularized; and

(b) whether they are placed on a par with their counterparts in Madras State Service in respect of pay and allowances?

The Hon. Sri V. RAMAIAH: (a) It is presumed that the M.L.A. refers to the integration of services of the work-charged establishment personnel allotted to this State from the former Travancore-Cochin State. Orders have since been issued integrating the services of the work-charged establishment personnel allotted to this State from the former Travancore-Cochin State.